தலைப்பு 235 – சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 235 – சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 செப்டம்பர் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் சட்ட ஆணைக்குழுத் திணைக்களத்தின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வருமானம் அல்லாத பெறுவனவு

நிதிக்கூற்றுக்களுக்குரிய வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடு அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திறைசேரி அச்சீடு SA-52 பிரகாரம் முற்பணம் பெறுவனவு ரூபா 807,918 தொகை ஆன போதும், அந்த பெறுமதியை குறிப்பிடப்படாத காரணத்தால் வருமான அல்லாத பெறுவனவின் மொத்த பெறுமதி அந்த பெறுமானத்தால் குறைத்து நிதி செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.	முன்னைய ஆண்டுகளின் போது இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது முற்பண கணக்குகள் பெறுவனவு குறிப்பிடுவது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் கிடைத்த அறிவுரைகள் பிரகாரம் கணக்கு தயாரிக்கப்பட்டது. தங்களால் காண்பிக்கப்பட்டள்ள அவதானிப்பு தொடர்பாக விடயங்களை மேலும் கண்டறிந்து எதிர்வரும் ஆண்டின் போது தேவையான சரிசெய்தல்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.	திறைசேரி அச்சீடுகளின் பெறுமதிகளை நிதி செயலாற்றில் கூற்றில் காண்பிக்க வேண்டும்

(ஆ) **ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	2018 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 04/2018 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் நிதி அல்லாத சொத்துக்கள் அறிக்கையிடும் போது ரூபா 5,000 அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுடன்கூடிய நிதி அல்லாத சொத்தக்களை இனங்கண்டு அறிக்கையிட வேண்டிய போதும், ரூபா 5,000 இற்கு குறைந்த ரூபா 229,160 பெறுமதியான 501 நுகர்வு போருட்கள் உறுப்படிகளை நிதி அல்லாத சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்தது.	அரச கணக்குகள் திணைக்களத்தின் கணக்குப் பிரமாணம் பிரகாரம் நிறுவனத்தின் தன்மை மற்றும் அளவின் மீது ரூபா 5,000 இற்கு குறைந்த உறுப்படிகளை சொத்துக்களை மதிப்பீடு செய்யும் போது கவனத்திற் கொள்ளப்படுவதனால், சொத்துக்கள் அறிக்கையின் பெறுமானங்களை திருத்துவது பிரச்சினைக்கரியதாகையால் 2025 ஆண்டு முதல் எதிர்காலத்தில் ரூபா 5,000 இற்க குறைந்த நுகர்வு பொருட்களை சொத்துக்களின் கீழ் எடுக்காது நடவடிக்கை எடுக்க திணைக்களம் தீர்மானித்துள்ளதென தயவுடன் அறிவிக்கிறேன்.	நுகர்வு பொருட்களை சொத்துக்களாக கணக்கீடு செய்ய கூடாது.
(ii)	புதிய CIGAS நிகழ்ச்சித்திட்டத்தை திணைக்களத்தினுள் 2024 ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்ட காரணத்தால் 2024 திசெம்பர் 31 திகதிக்கு திணைக்களத்திற்கு சொந்தமான நிதி அல்லாத சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம் ஏனைய இயந்திர மற்றும் உபகரணங்களின் கூட்டுத்தொகை ரூபா 34,495,611 ஆன போதும், ரூபா 33,947,340 ஆக ரூபா 548,271 குறைத்து திறைசேரி அச்சீடு SA-82 இல் காண்பிக்கப்படடிருந்தது.	தங்களது உவதானிப்புடன் இணங்குகிறேன். 2025 ஆண்டின் போது அதை சரி செய்வதற்ககு நடவடிக்கை எடுக்கப்படும்.	திறைசேரி அச்சீடு SA-82 இல் பெறுமதியை சரியாக காண்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) கட்டுநிதி மீதிகள்

கட்டுநிதி மீதிகளை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	திணைக்கள பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய தலைப்பிற்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால் முற்பண "பீ" கணக்கிற்காக செய்யப்பட்ட செலவு வைத்தல் எதுவும் இல்லாத போதும், ரூபா 807,918 ஆக கட்டுநிதி சீராக்கல் கூற்றில் காண்பிக்கப்ட்டிருந்தது.	தங்களது அவதானிப்பு தொடர்பாக மேலும் விடயங்களை கண்டறிந்து தேவையான திருத்தங்களை எதிர்வரும் ஆண்டில் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.	சரியாக குறிப்பிட வேண்டும்.
(ii)	திறைசேரி அச்சீடு SA-71 பிரகாரம் ஏனைய மூலங்களிலிருந்து கட்டுநிதி பெறுவனவு ரூபா 875,852 ஆன போதும், ACA-3 படிவத்தில் அந்த பெறுமானம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	தங்களது அவதானிப்புடன் இணங்குகிறேன். 2025 ஆண்டின் போது அதை சரி செய்வதற்ககு நடவடிக்கை எடுக்கப்படம்.	ACA-3 படிவத்தில் SA-71 பிரகாரம் பெறுவனவு சரியாக குறிப்பிடப்ட வேண்டும்.
(iii)	திறைசேரி அச்சீடு SA-71 பிரகாரம் கட்டுநிதி தீர்பனவு ரூபா 17,737,902 ஆன போதும், ரூபா 16,862,050 ஆக ரூபா 875,852 குறைத்து ACA-3 படிவத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.	தங்களது அவதானிப்புடன் இணங்குகிறேன். 2025 ஆண்டின் போது அதை சரி செய்வதற்ககு நடவடிக்கை எடுக்கப்படம்.	ACA-3 படிவத்தில் SA-71 பிரகாரம் பெறுவனவு சரியாக குறிப்பிடப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன என்பதற்கு

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	மீண்டெழும் 16 செலவின விடயங்களில் மற்றும் மூலதன 02 செலவின விடயங்களில்	மீண்டெழும் மற்றும் மூலதன செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டது அதற்கு	சரியான ஆய்வின் மற்றும் சிக்கனமாக மதிப்பீட்டை

	நிதிஏற்பாடு ரூபா 24,360,000 இனால் ரூபா 5,542,385 எஞ்சியிருந்துடன், அது 12 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவில் பரந்திருந்து. அதன் பிரகாரம் தேவைபாட்டை இனங்காணாது மதிப்பீடு தயாரித்திருந்தது.	முன்னைய ஆண்டுகளில் (2023) திணைக்கள செலவினங்களில் ஏற்ற இறக்கத்தை கவனத்திற்கொள்ளப்பட்டாகும். எனினும் நடைமுறைரீதியாக ஒவ்வொரு செலவின விடயங்களிற்காக 2024 நிதி ஆண்டில் 2023 ஆண்டிற்கு ஒப்பாக அந்த செலவினம் ஏற்படாதமையினால் மீது நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது.	தயாரிக்க வேண்டும்.
(ஆ)	மீண்டெழும் 02 செலவின விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 100,000 ஆன நிதிஏற்ட்டு தொகை முழுமையாக எஞ்சியிருந்தது.	மீண்டெழும் மற்றும் மூலதன செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டது அதற்கு முன்னைய ஆண்டுகளில் (2023) திணைக்கள செலவினங்களில் ஏற்ற இறக்கத்தை கவனத்திற்கொள்ளப்பட்டாகும். எனினும் நடைமுறைரீதியாக ஒவ்வொரு செலவின விடயங்களிற்காக 2024 நிதி ஆண்டில் 2023 ஆண்டிற்கு ஒப்பாக அந்த செலவினம் ஏற்படாதமையினால் மீது நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது.	உரிய கவனத்துடன் மற்றும் சிக்கனத்துடன் மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும்.
(இ)	235-1-1-0-1403/0-11 செலவின விடயத்திற்காக நிதிப்பிரமாணம் 66 மாற்றங்களின் கீழ் ரூபா 500,000 ஆன நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை அந்த அளவு முழுமையாக எஞ்சியிருந்தது. அதன் பிரகாரம் அந்த செலவின விடயத்தில் செலவாகாமை எஞ்சியிருந்த மொத்த நிதிஏற்பாடு ரூபா 570,190 ஆகியிருந்ததுடன, செலவின முகாமை செய்யும் சுற்றறிக்கைக்கு இணங்க செலவின கட்டுப்படுத்தலாக காரணங்கள் குறிப்பிட்ப்பட்டிருந்த போதும், நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் நிதிஏற்பாடு மாற்றும் போது தேவைபாட்டை சரியாக இனங்காணாது நிதிஏற்பாடு மாற்றப்படடிருந்தது.	ஆண்டு நடுவில் சட்ட வரைவு திட்டமிடல் திணைக்களத்தினால் எமக்கு அனுப்பிய நிதிஏற்பாடு கோரும் கடிதத்தின் பிரகாரம் எதிர்வரும் பல மாதங்களிற்காக நீர் மின்சாரம் மற்றும் பாதுகாப்பு சேவை செலவினங்களிற்காக நிதிஏற்பாடு போதாததனால் அந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. வியங்கள் அவ்வாறாயினும், சட்ட வரைவு திட்டமிடல் திணைக்களம் எதிர்வு கூறிய தொகை உண்மையாக ஏற்படாததன் மீது இந்த மீதி எஞ்சியுள்ளது. அது எமது திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிலைமையாகும்.	தேவைபாட்டை சரியாக இனங்கண்டு நிதிப்பிரமாணம் பிரகாரம் நிதிஏற்பாடு மாற்றம் செய்ய வேண்டும்.
(ஈ)	செலவின விடயங்கள் 05 இனது கூட்டுத் தொகை ரூபா 3,105,694 சேமிப்பிற்காக 2024 ஆண்டில் ஒதுக்கிய நிதிஏற்பாட்டில் எஞ்சிய	மீண்டெழும் மற்றும் மூலதன செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டது அதற்கு முன்னைய ஆண்டுகளில் (2023) திணைக்கள செலவினங்களில்	தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட

	அளவாக நியாயப்படுத்தப்பட்டிருந்த போதும், இந்த செலவு விடயங்களில் சேமிப்பிற்கு காரணத்தை நியாயப்படுத்த போதிய விடயற்களை நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பித்திருக்காததுடன், தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும்.	ஏற்ற இறக்கத்தை கவனத்திற்கொள்ளப்பட்டாகும். எனினும் நடைமுறைரீதியாக ஒவ்வொரு செலவின விடயங்களிற்காக 2024 நிதி ஆண்டில் 2023 ஆண்டிற்கு ஒப்பாக அந்த செலவினம் ஏற்படாதமையினால் மீது நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது.	வேண்டும்.
(உ)	235-1-1-0-1203-002/11 செலவு விடயத்தில் ரூபா 30,000 தொகை அதாவது மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாட்டின் 60 சதவீதம் எஞ்சுவதற்காக 2024 ஆண்டில் ஒதுக்கிய நிதிஏற்பாட்டில் செலவான அளவென நியாயப்படுத்தப்பட்டிருந்தது. சீருடை படிகளிற்கு உரிமையுடைய அங்கீகார உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 07 ஆன போதும், அது தொடர்பாக கவனத்திற் கொள்ளாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.	இத் திணைக்களத்தின் ஆரம்ப சேவையின் உத்தியோகத்தர் வெற்றிடங்கள் 2024 ஆண்டில் புதிய ஆட்சேர்ப்பினால் நிரப்பப்படும் என எதிர்பார்த்த போதும், அரசின் கொள்கை மீது புதிய ஆட்சேர்ப்பு இடம்பெறாததன் மீது சீருடை படிகள் செலவு விடயத்தில் நிதிஏற்பாடு எஞ்சியது.	தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.
(ஊ)	235-1-10-1506-0/11 செலவு விடயத்தின் சேமிப்பு 99.25 சதவீதமானதுடன், அந்த சேமிப்புக்களிற்கான காரணமாக தற்போது ஆதன கடன் வட்டி கோரியுள்ள மற்றும் தகைமை பூர்த்தி செய்துள்ள அனைத்து உத்தியோகத்தர்களிற்கும் வழங்கிய பின்னரான மீதியென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச ஊழியர்களிற்கு ஆதன கடன் வட்டி தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.	மீண்டெழும் மற்றும் மூலதன செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டது அதற்கு முன்னைய ஆண்டுகளில் (2023) திணைக்கள செலவினங்களில் ஏற்ற இறக்கத்தை கவனத்திற்கொள்ளப்பட்டாகும். எனினும் நடைமுறைரீதியாக ஒவ்வொரு செலவின விடயங்களிற்காக 2024 நிதி ஆண்டில் 2023 ஆண்டிற்கு ஒப்பாக அந்த செலவினம் ஏற்படாதமையினால் மீது நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது.	தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.
(எ)	செலவு விடயங்கள் 03 இல் ரூபா 447,381 ஆன சேமிப்பிற்காக திசெம்பர் மாதத்திற்குரிய செலவாக நியாயப்படுத்தியுள்ள போதும், திசெம்பர் மாதத்திற்குரியதாக அந்த 03 செலவு விடயங்களிங்காக கூட்டுத் தொகை ரூபா 65,253	மீண்டெழும் மற்றும் மூலதன செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டது அதற்கு முன்னைய ஆண்டுகளில் (2023) திணைக்கள செலவினங்களில் ஏற்ற இறக்கத்தை கவனத்திற்கொள்ளப்பட்டாகும். எனினும் நடைமுறைரீதியாக ஒவ்வொரு செலவின	தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும்.

செலவிட்ட பின்னர் ரூபா 382,128 ஆன நிதிஏற்பாடு மேலும் எஞ்சியிருந்தது.	விடயங்களிற்காக 2024 நிதி ஆண்டில் 2023 ஆண்டிற்கு ஒப்பாக அந்த செலவினம் ஏற்படாதமையினால் மீது நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது.

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

	அவதானிப்புக்கள்			**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணங்காமை**		
(அ)	2006 இன் 12 ஆம் இலக்க கொண்ட முத்திரை கட்டண (விஷேட ஏற்பாடு) சட்டத்தின் 7(1) பந்தி	3,975	அறவிடப்பட்ட ரூபா 3,975 பெறுமதியான முத்திரை கட்ணத்திற்காக தேசிய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்து ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்து 15 நாட்களிற்குள் தேசிய உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய போதும், அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் அரச கணக்குகள் திணைகளத்துடன் தொடர்புபட்டு சரி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு உரிய விடய பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.	சட்டத்தின் பிரகாரம் முத்திரை கட்டணம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணம் 238 (5) பிரிவு	1,744,263	மாதாந்த சம்பளம் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு உத்தியோகத்தரினாலும் சம்பள குறிப்புப்பத்திரத்தில் கையொப்பம் இட்டுள்ளதென சம்பளம் செலுத்தும் உத்தியோகத்தரினால் உறுதி செய்ய வேண்டிய போதும், 23 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 1,744,263 ஆன சம்பளம் கொடுப்பனவிற்காக உத்தியோகத்தர்கள்	சம்பள குறிப்புப்பத்திரத்தை சம்பளம் செலுத்தும் போது எடுக்குமாறு விடய பொறுப்பு உத்தியோகத்தரிற்கு தெரிவிக்கப்பட்டுது.	நிதிப்பிரமாணம் பிரகாரம் சம்பள குறிப்பு பத்திரத்தில் கையொப்பமிட நடவடிக்கை எடுக்க வெண்டும்.

		சம்பள குறிப்புபத்திரத்தில் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை.		
(இ)	2024 திசெம்பர் - 16 திகதிய இலக்கம் 06/2024 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டியின் 3.1 பிரிவு	CIGAS டெக்ஸ்டொப் பயன்பாட்டினால் உருவாக்கப்படும் பரீட்சை மீதியை இணைப்பாக நிதிக்கூற்றுக்களில் இணைக்கப்பட்டிருக்க வேண்டிய போதும், அது இணைக்கப்படடிருக்கவில்லை. அவ்வாறே புதிய CIGAS வெப்பயன்பாட்டு முறைமையினால் பெற்றுக்கொண்ட இறுதி திறைசேரி கணக்கு கூற்றுக்களான SA 10, 12, 50, 51 மற்றும் 90 நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்காததுடன், புதிய CIGAS வெப்பயன்பாட்டின் மூலம் உருவாக்கப்படும் தேறிய கடப்பாடுகள் மற்றம் பொறுப்புக்கள் அறிக்கை இணைப்பு (iii) பதிலாக உள்ளடக்கப்பட வேண்டிய போதும், அவ்வாறு இணைக்கப்ட்டிருக்கவில்லை.	எதிர் வரும் ஆண்டுகளில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்படும் கூற்றுக்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2024 ஆண்டில் சட்ட மறுசீரமைப்பு 04 பணிகள் செயற்படுத்தப்பட்டு இருந்ததுடன், இதனை 2024 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தி இருக்கவில்லை. இதனுள் உள்ளடங்கும் வங்கரோத்து தன்மை பற்றிய சட்ட மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது 2023 ஜுன் 26 ஆம் திகதியாகும்.	சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் அமைக்கப்பட்டுள்ளது சட்ட ஆணைக்குழுவிற்கு தேவையான நிர்வாக ரீதியான உதிவியை வழங்கவாகும். அதன் பிரகாரம் திணைக்களத்தின் செயல் நடவடிக்கை திட்டமாக காண்பிக்கப்படுவது வருடாந்த நிதி திட்டமாகும். அதில் உள்ளடக்கப்படுவது மூலதன செலவு பற்றிய திட்டமாகும். சட்ட ஆணைக்குழுவின் செயல் நடவடிக்கை திட்டத்தில்	ஆண்டினுள் மேற்கொள்ளவுள்ள பணிகளை அந்த ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்த வேண்டும்.

		உள்ளடக்கப்படுவது சட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்பான வருடாந்த திட்டமாவதுடன், அதனை நிதிரீதியான பெறுமானத்தில் காட்ட முடியாதுடன், சட்ட ஆணைக்குழுவினால் திட்டமிடும் சட்ட மறுசீரமைப்பு உத்தேசங்கள் தொடர்பாக பௌதீக பெறுமானங்களை காட்டும் திட்டமொன்றாகும். அதன் பிரகாரம் 2024 ஆண்டில் செயலாற்றுகை தொடர்பான திட்டம் நீதிமன்ற அமைச்சின் திட்டமிடல் பிரிவிற்கு திணைக்களத்தினால் காலாண்டு ரீதியாக அனுப்பப்படுகிறது. வங்கரோத்து தன்மை தொடர்பான சட்ட மறுசீரமைப்பு மற்றும் குறித்த அமைச்சரவை பத்திரம் வெளியிடப்பட்டுள்ளது 2023/06/07 திகதி ஆவதுடன், அதனை நீதிமன்ற அமைச்சு எமக்கு அனுப்பிய உடனே அதன் பின்னர் நடந்த முதலாவது சட்ட ஆணைக்குழு கூட்டத்தை 2023/06/26 திகதி நடாத்தியதுடன் அந்த அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்படும் சட்ட மறுசீரமைப்பு உப குழுவொன்றை நியமித்து முன்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது.	
(ஆ)	திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் செயல் நடவடிக்கை திட்டத்தை நிறுவனத்தின் பணிப்பொறுப்பு மற்றும் நோக்கங்களை உள்ளடக்கும் வகையில் தயாரித்திருக்காததுடன், செயலாற்றுகை குறியீடுகளை நிறுவனத்தின் பணிப்பொறுப்பு மற்றும் நோக்கங்களின் மீது அடிப்படையில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த திணைக்களத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தை நிறுவனத்தின் பணிப்பொறுப்பு மற்றும் நோக்கங்களை இனங்கண்டு தயாரித்து நீதிமன்ற அமைச்சின் திட்டமிடல் பிரிவிற்கு அனுப்பியதுடன் காலாண்டு ரீதியாக அதன் முன்னேம் அறிக்கையிடப்படும்.	செயல் நடவடிக்கை திட்டத்தில் நிறுவனத்தின் பணிப்பொறுப்பு மேற்கொள்ளப்படும் விதம் உள்ளடங்குமாறு தயாரிக்கப்பட வேண்டும்.

4.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
1969 இன் 03 ஆம் இலக்கம் கொண்ட சட்ட ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட கற்கை தொடர்பாக சட்ட ஆணைக்குழு திணைக்கள சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	சட்ட ஆணைக்குழு திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைதளயத்தின் முன்னைய சட்ட ஆணைக்குழு ஆராய்ச்சி அறிக்கை போன்றே தற்போதைய சட்ட ஆணைக்குழு ஆராய்ச்சி அறிக்கைகள் பொது மக்கள், மாணவர்கள அல்லது சட்ட ஆராய்ச்சி மேற்கொள்ளும் எந்த ஒருவருக்கும் பயன்படுத்த முடியுமானவாறு நாளாதுவரையாக்கப்பட்டு தரவேற்றப்பட்டுள்ளது. அதனூடாக சட்ட ஆணைக்குழுவின் உப கடமைகளாக குறிப்பிடப்பட்டுள்ள சட்ட கல்விற்காக பங்களிப்பு வழங்கப்படும். சட்ட கல்விற்காக சட்ட கல்விச் சபை (சட்டக் கல்லூரி) அடிப்படை அதிகாரத்தை வழங்கி நிறுவப்பட்டுள்ளதால் சட்ட கல்வி தொடர்பாக சட்ட ஆணைக்குழுவிற்கு நேரடி பொறுப்பொன்று இல்லையென மேலும் அறிவிக்கிறேன்.	சட்ட கல்வி தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாணம் 880 பிரகாரம் அரச நிதி வருமானம் முத்திரை மற்றும் பண்டப்பொருட்கள் பொறுப்பேற்றல் அல்லது பொறுப்பாகவிருத்தல், அவ்வாறு இல்லாவிடின் அரச நிதி பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரை இல்லாவிடின் பண்டப்பொருட்கள்	இந்த அவதானிப்பில் குறிப்பிடப்படும் இரண்டு உத்தியோகத்தர்களினது பிணை வைப்பு தொடர்பாக விண்ணப்பங்கள் மற்றும் உரிய ஆவணங்கள் நீத்மன்ற அமைச்சுக்கு இரண்டு முறை அனுப்பியுள்ளதுடன், அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் சில	தொடர்புடைய நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	விநியோகித்தல் தொடர்பாக நிர்வாக ரீதியாக பொறுப்புவாய்ந்த அல்லது அதிகாரத்தை ஒப்படைத்ததன் கீழ் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்ட்டுள்ள அல்லது உத்தியோகத்தர்களும் அரசாங்க கணக்கிற்குரிய வவுசர் அத்தாட்சிபடுத்தும், காசோலை கையொப்பமிடுவர்களும், தனது கடமைகளை நேர்மையாக மேற்கொள்வதற்கு 612 ஆம் அத்தியாயமான அரச உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு மற்றும் நீதிமன்ற அமைச்சின் 2011 சனவரி 18 ஆம் திகதிய இலக்கம் 01/2011 கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் பிணை வைக்க வேண்டிய இரண்டு உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை.	குறைபாடுகளை குறிப்பிடப்பட்டு மீண்டும் எமக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த குறைபாடுகளை சரி செய்து மீண்டும் நீதிமன்ற அமைச்சுக்கு சமர்ப்பிக்க நடவவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.	

4.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	சர்வதேச குழந்தை கடத்த தொடர்பான சிவில் துறைகளுக்கான மாநாட்டு சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்துதல் மற்றும் பங்குடமை சட்டத்திற்குரிய திருத்தம் எனும் இரண்டு சட்ட மறுசீரமைப்பு பணிகளும் 2024 ஆண்டின் முதலாம் காலாண்டினுள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், 2024 திசெம்பர் 31 திகதி வரை நிறைவு செய்திருக்கவில்லை.	சட்ட மறுசீரமைப்பை நிறைவு செய்வதற்காக கனிசமான காலம் செல்வதுடன், அந்த சட்ட மறுசீரமைப்பு உத்தேசம் தொடர்பாக மேலும் கலந்துரையாடும் தேவைப்பாடு தோற்றம் பெற்றதன் மீது அந்த மறுசீரமைப்பு முன் எடுத்துச் செல்லப்பட்டது.	பணிப்பொறுப்புகளை மேற்கொள்ள செயற்பட வேண்டும்.
(ஆ)	2024 சனவரி 18 திகதி நடாத்தப்பட்ட ஆணைக்குழு கூட்டத்தில் 2024 ஆண்டிற்காக 12 கூட்டங்களை நடாத்த அங்கத்தவர்கள் இணங்கியிருந்த போதும், மீளாய்வாண்டிற்காக 08 கூட்டங்கள் மாத்தரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ஆணைக்குழுவின் 14 அங்கத்தவர்களில் 05 பேர்கள் எவ்வித கூட்டத்திற்கும் பங்குபற்றி இருக்கவில்லை. இதன் பிரகாரம்,	அவ்வாறான அங்கத்தவர்களின் அங்கத்துவம் ஒழிவது தொடர்பாக சட்ட ஆணைக்குழு சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாதுள்ளமை இது தொடர்பாக முன்நடவடிக்கை எடுப்பதில் தடையாகவுள்ளதாக சட்ட ஆணைக்குழு கூட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது சட்ட	கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்களை கூட்டத்திற்காக பங்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கூட்டத்திற்காக அங்கத்தவர்களின் பங்குபற்றல் குறைவடைவதனூடாக சட்ட ஆணைக்குழுவின் பணிகளை துரிதமாக செய்து கொண்டு செல்வதற்கு தடையாக இருந்தது.	ஆணைக்குழுவின் பதவிக் காலம் முடிவடைந்துள்ளதால் மீண்டும் சட்ட ஆணைக்குழுவை நிறுவுவதற்கு நீதிமன்ற அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், அந்த கோரிக்கை அங்கத்தவர்களின் 2023/2024 வருகை பற்றிய அறிக்கையையும் கவனத்திற் கொள்வதற்காக நீதிமன்ற அமைச்சின் செயலாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது.	
(இ)	சம்பளமற்ற விடுமுறை பெற்றுள்ள உத்தியோகத்தரின் ஆண்டு 1-3 இடையிலான காலமாக அறவிட வேண்டியதாக காணப்படும் இடர் கடன் மீதி ரூபா 162,500 ஆக இருந்தது.	மேற்குறித்த உத்தியோகத்தரினால் 2025/02/14 திகதி திணைக்களத்திற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதுடன், அவர் தற்போது பெற்றுக் கொள்ளும் மருத்துவ சிகிச்சை முடிவடைந்த உடனே கடமைக்கு அறிக்கையிடுவதாக அறிவித்து அனுப்பியுள்ளார். விடயம் எவ்வாறாயினும் இவ்வாண்டு மூன்றாம் காலாண்டு அளவிலேனும் அவர் கடமைக்கு வரவில்லை எனில் கடன் மீதியை தீர்க்குமாறு எழுத்து மூலம் அறிவிக்க கருதப்பட்டுள்ளது.	கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்

5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	சிரேஷ்ட மட்டத்தில் உள்ளடங்கும் உதவி செயலாளர் பதவியல் அங்கீகார ஊழியர் எண்ணிக்கை 04 ஆன போதும், உண்மையான ஊழியர் எண்ணிக்கை 01 ஆனதில் 03 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும், அந்த பதவியை நிரப்ப தேவையில்லையென செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.	சிரேஷ்ட மட்டத்தில் காணப்படும் மூன்று வெற்றிடங்களையும் தற்போது காணப்படும் கடமை கொள்ளவு பிரகாரம் நிரப்புவது அவசியமில்லை.	தேவையற்ற பதவிகளை கீழ்படுத் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இரண்டாம் மட்டத்தினுள் அங்கீகார ஊழியர் எண்ணிக்கை	கணக்கு உதவியாளர் பதவி வெற்றிடமான போதும், அதனை	கடமைகளை நிரைவேற்ற

	15 ஆன போதும், உண்மையான ஊழியர் எண்ணிக்கை 06 ஆனதில் 09 வெற்றிடங்கள் காணப்பபட்டன. இதனுள் கணக்கு உதவியாளர் ஒரு பதவியும், அபிவிருத்தி உத்தியோகத்தர் பதிவி 01 உம், முகாமைத்துவ உதவியாளர் பதவி 06 உம், சுருக்கெழுத்துதாளர் பதவியும் வெற்றிடமா காணப்பட்டன. எனினும் சுருக்கெழுத்தாளர் பதிவி கீழ்படுத்த முடியுமான பதிவியாக செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.	நீதிமன்ற அமைச்சினுள் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பதவியாவதுடன், (close service) ஏனைய சேவைகளின் உத்தியோகத்தர்களினால் அந்த வெற்றிடத்தை நிரப்ப முடியாது. அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி 01 மற்றும் முகாமைத்துவ உதவியாளர் 06 வெற்றிடத்தை குறைந்தபட்சமாவது நிரப்புவது அத்தியவசியமாகும். சுருக்கெழுத்தாளர் பதிவி தற்போது இந்த திணைக்களத்திற்கு அவசியமில்லாததுடன் கீழ்படுத்த முடியுமான பதிவியாகும்.	தேவையான பதவி வெற்றிடங்களை நிரப்பவும் கீழ்படுத்த வேண்டிய பதவிகளை கீழ்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	ஆரம்ப மட்டத்தில் உள்ளடங்கப்பட்ட சாரதி பதவியின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 04 ஆன போதும், உண்மையான ஊழியர் எண்ணிக்கை 02 ஆகையால் 02 வெற்றிடங்கள் காணப்பட்டன.	02 சாரதி வெற்றிடங்கள் மிக அத்தியாவசியமாகும். மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக நீதிமன்ற அமைச்சின் நடைபெற்ற ஆளணி மீளாய்வு கூட்த்தில் போதும் அறிவித்திருந்ததுடன், தேவையான வெற்றிடங்களை அரச கொள்கைரீதியான காரணங்கள் மீது தற்போதும் பூர்த்தி செய்துகொள்ள முடியாதுள்ளது.	வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.